

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 25-08-2023


# உணர்ச்சிமிகு உண்ணாநிலைப் போர்!

ஆளும் கட்சியாக இருக்கும் போதும் - போராட்டம் நடத்தும் கட்சியாக இருப்பது திராவிட முன்னேற்றக் கழகமாக மட்டும் தான் இருக்க முடியும். ஆட்சிக்கு வந்து விட்டோம், மற்ற பிரச்சினைகளைப் பற்றிக் கண்டுகொள்ள மாட்டோம் என இருப்பதில்லை கழகம். எதிர்க்கட்சியாக இருந்தபோது எதற்காகப் போராடினோமோ அதை அமல்படுத்த சட்ட போராட்டம் மட்டுமல்ல, மக்கள் போராட்டங்களையும் நடத்தி செயல்படுத்திக் காட்டுவதில் தி.மு.க. முனைப்போடு செயல்பட்டு வந்துள்ளது.

'நீட்' தேர்வுக்கு எதிராக தி.மு.க. இளைஞரணி - மாணவரணி - மருத்துவரணி ஆகிய மூன்று அமைப்புகள் நடத்திய போராட்டம் என்பது தமிழ்நாடு வரலாற்றில் பொறிக்கத்தக்க முக்கியமான போராட்டமாக அமைந்துவிட்டது. தமிழ்நாட்டில் 39 இடங்களில் ஆகஸ்ட் 20ஆம் நாள் நடத்தப்பட்ட உண்ணாநிலை அறப்போராட்டமானது, நீட் தேர்வுக்கு எதிரான மிகப்பெரிய விழிப்புணர்ச்சியை இந்திய நாடு முழுமைக்கும் உருவாக்கி இருக்கிறது.

இந்தப் போராட்டத்தின் உணர்ச்சிமிகு நாயகராக - இளைஞரணிச் செயலாளர் உதயநிதி அவர்கள் காட்சியளித்தார்கள். 'அமைச்சராக இருப்பவர் போராடலாமா? போராட்டம் நடத்தினால்...?' என்றெல்லாம் சிலர் பயமுறுத்திப் பார்த்தார்கள். அவர்களுக்கு பயத்தைக் காட்டி விட்டார் உதயநிதி அவர்கள்.

'அமைச்சர் பதவியைப்பற்றிக் கவலையில்லை' என்று அவர் சொன்னதன் மூலமாக மண்புழு போல ஊர்ந்து பதவியைப் பெற்ற எடப்பாடி கூட்டம் மனப்புழுக்கம் அடைந்தது. பதவிகளுக்கான இயக்கம் அல்ல இது. கொள்கைக்கான இயக்கம்தான் இது என்பதை உதயநிதி அவர்களின் செயல் மெய்ப்பித்துக் காட்டி விட்டது.

"இந்தப் போராட்டம் ஆரம்பம்தான். முடிவல்ல. நீட் தேர்வு ரத்தாகும் வரை போராட்டம் தொடரும்" என்று உதயநிதி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். 'நான் அமைச்சராக இந்தப் போராட்டத்தில் பங்கேற்கவில்லை. சாதாரண மனிதனாக பங்கேற்றுள்ளேன்' என்று அவர் சொல்லிய உணர்வை அனைவரும் பெறுவதற்கு இந்தப் போராட்டம் காரணமாகி விட்டது.

'நீட்' தேர்வின் கொடூரமானது இப்போதுதான் அனைத்துத் தரப்பினரையும் சென்றடைந்துள்ளது. உண்ணாநிலைப் போராட்டம் மாபெரும் வெற்றி என்பதை அறிவித்து மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த அறிக்கையில் ஒரு கருத்தைக் குறிப்பிட்டு இருந்தார்கள்.

"காலை தொடங்கி மாலை வரையிலான இப்போராட்டத்தில் தி.மு.க. தொண்டர்கள், உடன்பிறப்புகள், அணிகளின் செயல்வீரர்கள் மட்டுமல்லாமல், ஏராளமான இளைஞர்கள், மாணவர்கள், பொதுமக்கள் பங்கெடுத்திருப்பதையும் ஊடகங்களின் வாயிலாகப் பார்த்தபோது மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். 'நீட்' தேர்வு அறிமுகம் செய்யப்பட்ட காலத்தில் எதிர்த்தவர்கள் நாம் சிலர்தான். ஆனால் இன்று இத்தேர்வின் கொடூரத் தன்மையை அனைவரும் அறிந்து விட்டார்கள். அதனால்தான் கட்சி எல்லைகளைக் கடந்து இத்தேர்வுக்கு எதிரான முழக்கம் நாடு முழுவதும் கிளம்பி வருகிறது. இவர்களது ஆதரவையும் சேர்த்து இப்போராட்டம் வெளிப்படுத்திவிட்டது" - என்று சொல்லி இருந்தார் முதலமைச்சர் அவர்கள். அத்தகைய உணர்ச்சியை இந்த உண்ணாநிலைப் போராட்டம் உருவாக்கிக் காட்டி விட்டது.

நீட் தேர்வுக்கு எதிரான தி.மு.க.வின் போராட்டத்தின் முக்கிய மைல் கல் இந்தப் போராட்டம் ஆகும்.

மருத்துவத்துக்கு ஒரு நுழைவுத் தேர்வு என்று சொல்லப்பட்டதுமே எதிர்த்த இயக்கம் தி.மு.கழகம். 2013 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் தேதியே தலைவர் கலைஞர் அவர்கள் அறிக்கை வெளியிட்டார்கள். நீட் தேர்வு மசோதாவுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் 11ஆம் தேதி உயிர் கொடுத்தது. அப்போதும் தலைவர் கலைஞர் அவர்கள் கடுமையான எதிர்ப்பை பதிவு செய்தார்கள்.

இந்த நிலையில் ஆட்சிக்கு வந்த தி.மு.க. அரசு, 'நீட்' தேர்வை ரத்து செய்வதற்கான சட்டரீதியான முயற்சிகளைத் தொடங்கியது. நீட் தேர்வின் தாக்கம் குறித்து அரசுக்கு அறிக்கை தாக்கல் செய்ய நீதியரசர் ஏ.கே.இராஜன் தலைமையில் உயர்நிலைக்குழுவை முதல்வர் மு.க.ஸ்டாலின் அமைத்தார். 'நீட்' தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்று அக்குழு பரிந்துரைத்தது. இதனை மையமாக வைத்தே தமிழ்நாடு சட்டமன்றத்தில் சட்ட முன்வடிவு கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. ஆளுநர் அதற்கு உரிய அனுமதி தரவில்லை. பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியில் அதனைத் திருப்பி அனுப்பினார். அவர் கேட்ட கேள்விக்கு விளக்கமளித்து, மறுபடியும் மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பியது. அதன் பிறகும் மந்தமாக இருந்தார் ஆளுநர். பல்வேறு அழுத்தங்களுக்குப் பிறகு குடியரசுத் தலைவருக்கு அனுப்பி இருக்கிறார்.

'அனைவர்க்கும் கல்வி' என்ற தத்துவத்துக்கு எதிரானவர்கள் பா.ஜ.க.வினர். தமிழ்நாட்டின் ஆளுநர் ரவியோ 'மனு' ரவி ஆவார். இவர்களிடம் மாற்றத்தை உருவாக்க முடியாது. ஒன்றிய அளவில் ஆட்சி மாறினால்தான் காட்சிகள் மாறும். இதனை தமிழ்நாட்டு இளைய சமுதாயம் உணர்ந்துவிட்டது.

**"மிக உறுதியாகக் கூறுகிறேன், 2024 நாடாளுமன்றத் தேர்தலில் நாங்கள் பங்கெடுக்கும் 'இந்தியா' கூட்டணி வெற்றி பெற்றால் 'நீட்' தேர்வு நிச்சயமாக விலக்கப்படும் என்ற உறுதியை நான் அளிக்கிறேன். எங்களது புதிய ஆட்சியில் நீட் தேர்வு நிச்சயம் இருக்காது என்பதை தேர்தல் வாக்குறுதியாகவே அளிக்க வைப்போம். அந்த வலிமையும் உறுதியும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு உண்டு" என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அளித்துள்ள உறுதி நிறைவேறும் காலம் வெகுதூரத்தில் இல்லை.**

இந்த உணர்ச்சியை உருவாக்கிய இளைஞரணி - மாணவரணி - மருத்துவ அணியை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அதிலும் குறிப்பாக ஆகஸ்ட் 20 என்பது, கழகத் தலைவரின் திருமண நாள் ஆகும். அந்த நாளில் மகன் உதயநிதி அவர்கள் 'நீட்' தேர்வுக்கு எதிரான போராட்டத்தில் பங்கேற்றது என்பது, 'கழகமே குடும்பம்' என்ற கொள்கையின் செயல்வடிவம் ஆகும்.

மணமேடைக்குச் செல்ல வேண்டிய நேரத்திலும் இந்தி எதிர்ப்பு ஊர்வலத்தில் பங்கெடுத்தார் தமிழினத் தலைவர் என்பதும் - திருமணமான ஐந்தாவது மாதத்தில் மிசாவில் கைதாகி சிறை சென்றவர் இன்றைய திராவிட மாடல் முதலமைச்சர் என்பதும் அனைவரும் அறிந்ததே. அந்தத் தொடர்ச்சியைத்தான் இன்று வரை நாம் பார்த்து வருகிறோம்.

கழகம் - குடும்பம் - கொள்கை - ஆட்சி ஆகிய நான்கும் ஒன்றோடு ஒன்று பிணைந்தும் ஒன்றை ஒன்று வளர்த்தும் வாழும், வாழவைக்கும் என்பதற்கு எடுத்துக்காட்டே, ஆகஸ்ட் 20 போராட்டம் ஆகும்!

●●

2 நாட்களுக்கு

## அதிக வெப்ப எச்சரிக்கை!

திருவனந்தபுரம், ஆக. 25-

கேரள மாநிலத்தில் இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை வழக்கம்போல் தொடங்காமல் தாமதமாக தொடங்கியது. அப்போது அனைத்து மாவட்டங்களிலும் கனமழை பெய்தது. சில மாவட்டங்களில் ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் குடியிருப்பு பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்தது. ஆனால் பருவமழை சில வாரங்களே நீடித்தது. அதன்பிறகு மழை பெய்யவில்லை. இதனால் வழக்கத்தை விட அங்கு வெயில் அதிகமாக அடித்தது. இந்த நிலையில் கேரள மாநிலத்தில் இன்றும், நாளையும் அதிக வெப்ப நிலை நிலவும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. கேரள மாநிலத்தில் இயல்பை விட 3 முதல் 5 டிகிரி வரை வெப்பம் அதிகமாக இருக்கும் என்றும். 9 மாவட்டங்களில் 34 முதல் 36 டிகிரி வரை வெயில் சுட்டெரிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.



அரசு பள்ளியில் படிக்கும் மாணவர்களின்நலன் காப்பதில் தமிழக முதல்வர் அதிக அக்கறையுடன் செயல்படுகிறார் என்று திருமலைராயபுரத்தில் நடைபெற்ற விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார். அருகில் மாவட்ட திட்ட இயக்குநர் திலகவதி, ஒன்றிய பெருந்தலைவர் ப.க.சிவகுருசாமி, கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் சத்தியமூர்த்தி உட்பட பலர் உள்ளனர்.

திருமலைராயபுரம் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு

# கூடுதல் வகுப்பறைகள் - கழிப்பறை வசதிகள் செய்து கொடுக்கப்படும்!

## மாணவர்களுக்கு விலையில்லாத மிதிவண்டிகளை வழங்கி அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

*சின்னாளபட்டி, ஆக.25-*

அரசு பள்ளியில் படிக்கும் மாணவர்களின்நலன் காப்பதில் தமிழக முதல்வர் அதிக அக்கறையுடன் செயல்படுகிறார் என்று திருமலைராயபுரத்தில் நடைபெற்ற விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழாவில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார். திருமலைராயபுரம் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள், கழிப்பறைகள் வசதி செய்து கொடுக்கப்படும் என அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதியளித்தார்.

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் ஸ்ரீராமபுரம் பேரூராட்சிக்கு உட்பட்ட திருமலைராயபுரத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் படிக்கும் மாணவ - மாணவியர்கள் மற்றும் சுற்றியுள்ள கே.புதுக்கோட்டை, சுள்ளெறும்பு பகுதியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவ மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவிற்கு மாவட்ட திட்ட இயக்குநர் திலகவதி தலைமை தாங்கினார். ரெட்டியார்சத்திரம் ஒன்றிய பெருந்தலைவர் ப.க. சிவகுருசாமி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணி, பேரூராட்சி மன்றதலைவர் சகிலாராஜா, ஆகியோர் முன்னிலை வகித்தனர். முதன்மை கல்வி அலுவலர் நசாரூதீன் வரவேற்று பேசினார்.

விழாவில் பள்ளி மாணவ மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கிவிட்டு தி.மு.க. மாநில துணைப்பொதுச் செயலாளரும், ஊரகவளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி பேசும் போது இன்று தமிழகத்தில் பள்ளி மாணவர்களின் கல்வித்தரம் உயர்ந்துள்ளது. குறிப்பாக அரசு பள்ளியில் பயிலும் மாணவ - மாணவியரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதற்கு காரணம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் வந்த திராவிட மாடல் ஆட்சி நாயகன் தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைந்த நல்லாட்சியே என்றார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசு பள்ளி மாணவர்களின் கல்விதரத்தை உயர்த்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். குக்கிராமமான இந்த கிராமத்தில் உள்ள அரசு பள்ளியில் 750க்கும் மேற்பட்ட மாணவ - மாணவியர்கள் படிக்கிறார்கள் என்றால் அதற்கு காரணம் அரசு பள்ளியின் கல்வித்தரமே இங்கு பணிபுரியும் ஆசிரிய, ஆசிரியர்கள் தன் நலம் கருதாத சேவையால் மாணவர்களின் கல்வியை மேம்படுத்தி வருகிறார்கள் அதற்கு நான் மனதார பாராட்டுகிறேன். பள்ளி நிர்வாகம் சார்பாக தங்களுக்கு கூடுதல் வகுப்பறையும், கழிப்பறை வசதியும் வேண்டுமென்று கோரிக்கைவிடுத்துள்ளார்கள். அவற்றை உடனடியாக நிறைவேற்ற உத்தரவிட்டுள்ளேன். அதற்கான பணிகள் விரைவில் தொடங்கும் என்றார்.

நிகழ்ச்சியில் ரெட்டியார் சத்திரம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மலரவண், கிருஷ்ணன், ஸ்ரீராமபுரம் பேரூர்கழக செயலாளர் ராஜா, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ப.ராஜேஸ்பெருமாள், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் முத்துக்குமார், பேரூராட்சி மன்ற துணைத்தலைவர் முருகேசன், ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றிய துணைச்செயலாளர் பொண்மணி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி பாறைப்பட்டி வாஞ்சிநாதன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பண்ணைப்பட்டி அருண் ஜெகநாதன், ஒன்றியகுழு உறுப்பினர் திருப்பதி, ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் செல்வம், ஆத்தூர் சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலக அலுவலர் வடிவேல் முருகன், புதுப்பட்டி திமுக நிர்வாகி உதயக்குமார், கரிசல்பட்டி ஜோசப் ஆசான், ஸ்ரீராமபுரம் பேரூர்கழக துணைச்செயலாளர்கள் பாலமுருகன், சுகப்பிரியா, சாந்தகுமார், பொருளாளர் துரையன், மாவட்ட பிரதிநிதிகள் குப்புச்சாமி, சாகுல் ஹமீது, எல்லை இராமகிருஷ்ணன், உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். நிறைவாக தலைமையாசிரியர் சந்திரா தேவி நன்றி கூறினார்.

கவர்னர் தனது வேலையை தவிர மற்ற எல்லாவற்றிலும் தலையை நீட்டுகிறார்; ஊட்டி கவர்னர் மாளிகையில்

# தனது மகளுக்கு எந்த அடிப்படையில் திருமணம் நடத்தினார்?

## தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!

*சென்னை, ஆக. 25-*

கவர்னர் தனது வேலையை தவிர மற்ற எல்லாவற்றிலும் தலையை நீட்டுகிறார் என்றும், ஊட்டி கவர்னர் மாளிகையில் தனது மகளுக்கு எந்த அடிப்படையில் அவர் திருமணம் நடத்தினார் என்றும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் கேள்வி எழுப்பியுள்ளார்.

சென்னை குடிநீர் வாரியம் சார்பில், ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வார்டுகளில் சுமார் 104 தெருக்களில், கழிவுநீர் கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளுக்காக ரூ52.69 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய கழிவுநீர் குழாய்கள் அமைக்கும் பணிகளுக்கு மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டினார்.

பின்னர் நிருபர்களிடம் கூறியதாவது: வரும் 2024ம் ஆண்டு தேர்தலில் 'இந்தியா' கூட்டணி அமோக வெற்றி பெறும். முதல்வர் மு.க.ஸ்டாலின் யாரை பிரதமராக காட்டுகிறாரோ அவர் கண்டிப்பாக நீட் தேர்வை தமிழ்நாட்டில் இருந்து அகற்றுவார். தமிழ்நாடு பா.ஜ. தலைவர் அண்ணாமலை எல்லாம் ஒரு தலைவரா? மக்கள் பிரச்சினைகளை திசை திருப்பும் வகையில் அவர் பேசிக் கொண்டு வருகிறார். தமிழ்நாட்டு கவர்னர் அவரது அதிகாரங்களின் எல்லைகளை மீறுகிறார். கவர்னரை கண்டிக்கின்ற உரிமை அனைவருக்கும் உண்டு. கவர்னரின் வேலை என்பது ஒரு தபால்காரனின் வேலை தான். தேவை இல்லாமல் அவர் மற்ற வேலைகளில் ஈடுபட்டு வருகிறார்.



கவர்னரின் பொறுப்பு என்பது ஓய்வு பெற்றவர்களுக்கு அளிக்கப்படும் பொறுப்பாகும். இந்த பொறுப்பை வாங்கிக் கொண்டு பா.ஜ.வை எதிர்க்கும் கட்சிகளை சிரமத்துக்கு உள்ளாக்கினால் அடுத்தபடியாக ஒன்றிய அரசு துணை ஜனாதிபதி அல்லது வேறு ஏதேனும் பொறுப்புகளை வழங்கும் என்ற ஆசையில் இதைப் போன்று தேவையற்ற வேலைகளை கவர்னர் ரவி செய்து வருகிறார். கவர்னர் ஆர்.என்.ரவி, ஊட்டியில் இருக்கக்கூடிய கவர்னர் மாளிகையில் அவருடைய மகளுக்கு எந்த அடிப்படையில் திருமணம் நடத்தினார்? தமிழ்நாடு அரசு பணத்தில் திருமணம் நடத்த அவருக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? இதற்கு கவர்னர் ஆர்.என். ரவி பதில் அளிப்பாரா?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

8 பேருக்கு பணி நியமன ஆணை! 5 புதிய வாகனங்கள்! 31 பயனாளிகளுக்கு

# ஈரோடு மாவட்டத்தில் ரூ.59.78 லட்சத்தில் நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார்!

*ஈரோடு, ஆக. 25-*

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 22.08.2023 அன்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் ரூ.63.91 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி குழுத் தலைவர்களின் பயன்பாட்டிற்காக புதிய ஈப்பு (Scorpio) வாகனங்களையும், பல்வேறு துறைகளின் சார்பில் 31 பயனாளிகளுக்கு ரூ.59.78 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளையும், கருணை அடிப்படையில் 8 நபர்களுக்கு பணி நியமன ஆணையினையும், மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா தலைமையில், ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி.சு.நாகரத்தினம் மற்றும் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் ஈவெகிச. இளங்கோவன் ஆகியோர் முன்னிலையில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஈரோடு மாவட்டத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, 22.8.2023 அன்று வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வைத்துறை அமைச்சர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில், ரூ.63,91,383/ மதிப்பீட்டில் சத்தியமங்கலம், டி.என். பாளையம், நம்பியூர், சென்னிமலை, பெருந்துறை ஆகிய 5 ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர்களுக்கு புதிய ஈப்பு (Scorpio) வாகனங்களை வழங்கினார்.

தொடர்ந்து மகளிர் திட்டம் சார்பில், ரூ.15,50,000/ மதிப்பீட்டில் அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 2 மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு வங்கி கடனுதவியினையும், மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் சார்பில், மாற்றுத் திறனாளிகள் நல வாரிய சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ், 1 பயனாளிக்கு விபத்து மரண உதவித்தொகையாக ரூ.1,00,000/ மற்றும் 9 பயனாளிகளுக்கு தலா ரூ.17,000/ வீதம் ரூ.1,53,000/ இயற்கை மரண ஈமச்சடங்கு உதவித்தொகையினையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் தலா ரூ.7,500/ வீதம் 10 நபர்களுக்கு ரூ.75,000/ மதிப்பீட்டிலான தையல் இயந்திரங்களும் மற்றும் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ், 8 பயனாளிகளுக்கு தலா ரூ.5.00 இலட்சம் வீதம் ரூ.40,00,000/ மதிப்பீட்டில் காப்பீட்டு திட்ட அட்டையினையும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை (சமூக பாது காப்பு திட்டத்தின் கீழ்) முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து சுற்றுச்சுவர் இடிந்து விழுந்து இறந்தவரின் குடும்பத்திற்கு ரூ.1,00,000/ நிதியுதவியினையும் என 31 பயனாளிகளுக்கு ரூ.59,78,000/ மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

தொடர்ந்து, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் கருணை அடிப்படையில் 1 பயனாளிக்கு கிராம நிர்வாக அலுவலர் (மொடக்குறிச்சி வட்டம்) பணி நியமன ஆணையினையும் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் சார்பில், கருணை அடிப்படையில் 7 பயனாளிகளுக்கு அங்கன்வாடி பணியாளர் பணி நியமன ஆணையினையும் வழங்கினார். மேலும், ஈரோடு மாவட்டத்தினை முன்னேற்றம் ஏற்படுத்துவதற்காக பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அதே போன்று அனைத்து துறைகளின் சார்பில் பொது மக்களின் நலனுக்காக நலத் திட்ட உதவிகளும் நாள்தோறும் வழங்கப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் அரசு அளிக்கின்ற நலத்திட்ட உதவிகளை பெற்றுக் கொண்டு நல்ல முறையில் தங்கள் வாழ்க்கை தரத்தினை உயர்த்திக் கொள்ள வேண்டுமென தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ச.சந்தோஷினி சந்திரா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) மனிஷ் ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், திட்ட இயக்குநர் மைக்கேல் (மகளிர் திட்டம்), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) செல்வராஜன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) ராஜகோபால், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் ரங்கநாதன், மாற்றுத்திறனாளிகள் நல அலுலவர் திருமதி. கோதை செல்வி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி.பூங்கோதை, ஈரோடு வட்டாட்சியர் ஜெய குமார் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

புகுஷிமா அணு கழிவு நீர்!

# கடலில் திறந்து விட்டது ஜப்பான்!

புகுஷிமா, ஆக. 25 –

ஜப்பானில் உள்ள புகுஷிமா அணுஉலை நிலையத்தில் நிலநடுக்கம் காரணமாக அணுக்கசிவு ஏற்பட்டது. இதனை கட்டுப்படுத்த கடல் நீர் மற்றும் போரிக் அமில ரசாயனத்தை ஜப்பான் பயன்படுத்தியது. அணுக்கசிவை கட்டுப்படுத்த பயன்படுத்தப்பட்ட கடலில் நீர், கதிரியக்க கழிவு நீராக மாறியது. அந்த நீரை சுத்திகரித்து பசிபிக் கடலில் விட ஜப்பான் முயற்சி மேற்கொண்டது.

இதற்காக அவற்றை சுத்திகரித்து பேரல்களில் சேமித்து வைக்கப்பட்டது. ஆனால், மீனவர்கள் மற்றும் சீனா தரப்பில் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. எனினும், நீரை வெளியேற்றுவதற்கான அனைத்து அனுமதிகளையும் ஜப்பான் பெற்றது. இதனால் நேற்று முதல் சுத்திகரிக்கப்பட்ட கதிரியக்க நீர் வெளியேற்றப்படும் என கடந்த வாரம் ஜப்பான் பிரதமர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், நேற்று முதல் பகுதியாக சுத்திகரிக்கப்பட்ட கதிரியக்க நீர் பசிபிக் கடலில் திறந்து விடப்பட்டுள்ளது. அணுஉலை நிலையத்தின் கட்டுப்பாடு அறையில் இருந்து லைவ் வீடியோ மூலம் தண்ணீர் திறந்து விடப்படும் காட்சி வெளியானது.